சுனிதா கேஜரிவாலை ராப்ரி தேவியுடன் ஒப்பிட்ட மத்திய அமைச்சர்

புது தில்லி, மார்ச் 29: தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவாலின் மனைவி சுனிதா கேஜரிவாலை பிகார் முன்னாள் முதல்வரும், லாலு பிரசாத் யாதவின் மனைவியுமான ராப்ரி தேவியுடன் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி வெள்ளிக்கிழமை ஒப்பிட்டுப் பேசினார்.

மேலும், சுனிதா கேஜரிவால் தனது கணவர் பதவியை வகிக்க தயாராகி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தில்லி பாஜக தேர்தல் அலுவலக திறப்பு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரியிடம் சுனிதா கேஜரிவால் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதில் அளிக்கையில், "நீங்கள் கூறும் நபர், பிகாரில் ராப்ரி தேவியைப் போல பதவியை வகிக்கத் தயாராகி இருக்கலாம்' என்றார்.

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINSERV

பெருநிறுவன அலுவலகம்: செரிபரம் IT பார்க் B2 கட்டடம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., தரைத்தளம், ஷட்டெள D அம்பா, எண் 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 600029. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: rathish.ramachandran@bajajfinserv.in, கைப்பேசி எண்: 9940155459/ 9884695545/8669189048.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏலப் பொது அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('சட்டம்') கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாக அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் ஆகியோர் கீழ்க்காணும் அசையாச் சொத்தை பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ('BHFL') நிறுவனத்திடம் அடமானம் வைத்துள்ளனர். இந்த அசையாச் சொத்து ('கடனீட்டுச் சொத்து / சொத்து') SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளுக்கு ஏற்ப அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி BHFL-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு இந்தக் கடனீட்டுச் சொத்தானது ஏலக்கோரல் முறையில் பொது ஏலத்தின் மூலம் 30.04.2024 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. கடனீட்டுச் சொத்தின் விற்பனையும் ஏலமும் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், விதி எண்கள் 8 & 9 ஆகியவற்றின் கீழ் (இனி 'விதிகள்' எனக் குறிப்பிடப்படும்). இது பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடத்தப்படும்.

கடன் கணக்கு விவரங்கள் / கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் பெயரும் முகவரியும்	1. E-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும் 4. சொத்து விவரம்	• குறைந்தபட்ச விலை • சொத்துக்கான டேவணித்தொகை [EMD] • ஏல உயர்வுத்தொகை
LANs: H403HHL0288722, H403HLT0296934 1. பூபேஷ் M (கடன்தாரர்), 2. பிரியதர்ஷினி S (கூட்டுக் கடன்தாரர்), இருவரது முகவரி: மனை எண் 4, F2, விக்னேஷ் என்கிளேவ், சிவசக்தி நகர், 1ஆவது தெரு, கௌசிக் அவென்யூ, ராஜகீழ்பாக்கம், செம்பாக்கம், பிள்ளையார்கோவில், சென்னை-600073. மொத்த நிலுவைத்தொகை: ரூ.46,58,641/- (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்று மட்டும்) மற்றும் 26.03.2024 வரையான மேல்வட்டி மற்றும் கட்டணங்கள் உட்பட.	1) E-ஏல நாளும் நேரமும்:- 30.04.2024 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:- 29.04.2024 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரப்படி). 3) சொத்து ஆய்வுக்கான நாள்:- 01.04.2024 முதல் 26.04.2024 முடிய முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரப்படி)	குறைந்தபட்ச விலை:- ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும்) டேவணித்தொகை [EMD]:- ரூ.3,30,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலையில் 10% ஏல உயர்வுத்தொகை:- ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்.

அசையாச் சொத்து விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய: முதல்தளத்தில் உள்ள அடுக்கக எண் F2, பரப்பளவு 900 சதுர அடி, இத்துடன் அனைத்து பொதுப்பகுதி, கார் நிறுத்தம், 425 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட, மனை இடத்தில் உள்ள 1925 சதுர அடிக் கொண்ட நிலத்தில் அடங்கியது, மனை எண் 4. சர்வே எண் 175/2A, பட்டாப்படி சர்வே எண் 175/34. அமைவிடம் - ராஜகீழ்பாக்கம் கிராமம், கௌசிக் அவென்யூ விரிவு II, தாம்பரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 7, தெற்கு: 30 அடிச் சாலை, கிழக்கு: மனை எண் 5, மேற்கு: மனை எண் 3.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

• பொது ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் நடைபெறும். மேலும் இது பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெடுக்குத் தெரிந்த அல்லது தெரியாத தற்பொழுதுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது. • கடனீட்டுச் சொத்து குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. • இந்த ஏல விற்பனை இணைய வழியில் e-ஏலத் தளத்தில் நடைபெறும். இந்த e-ஏலம் https://bankauctions.in எனும் இணைய முகப்பில் 30.04.2024 அன்று முற்பகல் 11:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணிக்குள் எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன் நடத்தப்படும். • நிறுவனத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறியப் பார்க்க வேண்டிய இணையத்தளம்: https://www.bajajhousingfinance.in/auction-notices அல்லது https://bankauctions.in மற்றும் மேலும் விவரங்கள் பெற அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

நாள்: 30.03.2024, இடம்: சென்னை | அதிகாரப்பூர்வ அலுவலர் (ரதீஷ் ராமச்சந்திரன்), பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

லீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண்.31, பழைய எண். 14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

கோரிக்கை அறிவிப்பு

அன்புடையீர்,
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் விதி 3(1)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு
கீழ்காணும் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது: 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சாத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் உங்கள் மீது நடவடிக்கை துவக்கியுள்ளது. இவ்வங்கி மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் உங்கள் அனைவருக்கும் கீழ் குறிப்பிட்ட தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பினை ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அந்த நோட்டீஸ் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துவிட்டது. இந்த அறிவிப்பினை கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அறிவிப்பு வெளியான தேதியிருந்த அறுபது நாட்களுக்குள் கீழ்காணும் கடன் பாக்கித் தொகையை செலுத்திடுமாறு உங்கள் அனைவரிடமும் இதன் மூலம் கோரப்படுகிறது. உங்கள் கடன் கணக்கு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா வழிகாட்டுதலின் படி வாராகடன் (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13 மற்றும் உட்பிரிவு (4)-ன்கீழ் வங்கிக்கு இருக்கும் உரிமைகளை கீழ்க்காணும் அடமான சொத்து மீது பிரயோகித்து நீங்கள் செலுத்தவேண்டிய கடன் பாக்கித்தொகையையும், வட்டி மற்ற இதர செலவுகளையும் சேர்த்து வசூலிக்கும் பொருட்டு உங்கள் அனைவர் மீதும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது மேலும் இந்த அறிவிப்பு வங்கிக்கு இருக்கும் எந்தவொரு தீர்ப்புக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது என்பது உங்களுக்கு தெரிந்ததே. மேற்படி கடனை அடைப்பதற்கான ஈடாக நீங்கள் அனைவரும் கடன் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டும் கீழே விவரிக்கப்பட்டுள்ளதற்கான சொத்தின் உரிமை பத்திரங்களை உரியதான முறையில் அடமானம் வைத்தும் ஆக்கிஸ் பேங்க் லிமிடெட் வசம் ஒப்படைத்துள்ளீர்கள். SARFAESI சட்டம் பிரிவு 13 (8)-ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன் பாக்கி, வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது அல்லது உரிமை மாற்றித் தரப்படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

வ.எண்.1 Ref.No.HL/6479: கடன்தாரர்கள்: 1. திருமதி. மகாதேவி, க/பெ. திரு. முத்துகுமார், 2. திருமதி. லக்ஷ்மி, க/பெ திரு. ரகுநாதன், இருவரின் முகவரி : எண்.39, ஜகதாம்பிகை தெரு, திருவாலீஸ்வரர் நகர், திருமங்கலம், அண்ணா நகர், சென்னை - 600 040. மேலும் : திருமதி. லக்ஷ்மி, க/பெ. திரு. ரகுநாதன், ப்ளாட் எண்.S2, 2வது தளம், பின்புறபகுதி ப்ளாட், விங்-1, ஷாம்ஸ் யோகம் அப்பார்ட்மெண்ட், மனை எண்.24, பழைய டவுன்ஷிப் சாலை, செக்கரிட்ரியேட் காலனி, அம்பத்தூர், சென்னை - 600 058. சொத்தின் முகவரி : ப்ளாட் எண்.S2, 2வது தளம், பின்புறபகுதி ப்ளாட், விங்-1, ஷாம்ஸ் யோகம் அப்பார்ட்மெண்ட், மனை எண்.24, பழைய டவுன்ஷிப் சாலை, செக்கரிட்ரியேட் காலனி, அம்பத்தூர், சென்னை - 600 058. **கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.02.2024, கடன் கணக்கு எண்.PHR086504049437, NPA தேதி : 08.02.2024, மொத்த நிலுவை தொகை : 21.01.2024 அன்று வரை உள்ள ரூ.41,19,385/- (ரூபாய் நாற்பத்தியொரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பத்து ஐந்து மட்டும்) (இந்த தொகையானது 21.01.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).**

சொத்துக்களின் விவரங்கள் - அட்டவணை-A : வடசென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அம்பத்தூர் கிராமம், சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட கதவு எண்.13/27, பழைய டவுன்ஷிப் அலுவலக சாலை, செக்கரிட்ரியேட் காலனி, அம்பத்தூர், சென்னை - 600 053 என்ற முகவரியில் பிளாக் எண்.18, வார்டு - B, பழைய சர்வே எண்.603/2D1 & 603/2B2, டவுன் சர்வே எண்.119/1ன்படி மனை எண்.24 (வடக்கு பகுதி)ல் உள்ள **3600 சதுர அடி** சொத்து. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.23, தெற்கில் : மனை எண்.24ன் தெற்கு பகுதி, கிழக்கில் : தனியார் நிலம், மேற்கில் : 40 அடி சாலை. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 100 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 100 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 36 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 36 அடி. அட்டவணை-B : அட்டவணை-Aல் குறிப்பிட்டுள்ள சொத்தில் **450/3600 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் **"ஷியாம்ஸ் யோகம்"** என்ற பெயர் கொண்ட கட்டிடத்தில் 2வது தளத்தில் பொது ஏரியா உட்பட **774 சதுர அடி** சூப்பர் பில்ட் ஏரியா கொண்ட ப்ளாட் எண்.2 மற்றும் அங்கு ஸ்டில்டு தளத்தில் உள்ள 1 கார் பார்க்கிங் மற்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ள எலக்ட்ரிக்கல் பொருட்கள் மற்றும் அதனுடன் அனைத்து பிட்டிங்ஸ் மற்றும் பொருத்தப்பட்டுள்ளவைகள்.

வ.எண்.2 Ref.No.HL/6481: கடன்தாரர்கள்: 1. திருமதி. செல்வி, க/பெ. திரு. ராஜேஷ், 2. திரு. ஷாஷங்.R, த/பெ. திரு. ராஜேஷ், இருவரின் முகவரி : எண்.69/33, 3வது குறுக்கு தெரு, ஸ்கீம் சாலை, எல்லையம்மன் காலனி, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. சொத்தின் முகவரி : RS எண்.141/1, ப்ளாட் எண்.B, தரைதளம், KG Oakside-II, மனை எண்.7, 8, 9, 10, 11, சிவகாமி 1வது தெரு, சாஸ்திரி நகர், திருவான்மியூர், சைதாப்பேட்டை, சென்னை - 600 041. **கோரிக்கை அறிவிப்பு தேதி: 21.02.2024, கடன் கணக்கு எண்.LPR008206635421, NPA தேதி : 08.02.2024, மொத்த நிலுவை தொகை : 21.02.2024 அன்று வரை உள்ள ரூ.77,61,350/- (ரூபாய் எழுபத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஒராயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்) (இந்த தொகையானது 21.02.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).**

சொத்துக்களின் விவரங்கள் : தென் சென்னை பதிவு மாவட்டம், தென் சென்னை இணை - I துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட எண்.1, சிவகாமிபுரம் முதல் தெரு, சாஸ்திரி நகர், சென்னை - 600 041 என்ற முகவரியில் அட்டவணை-A,B,Cல் உள்ள மொத்த நிலத்தில் 3.116/47-ல் 47% (அதாவது 373.92 சதுர அடி) பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் **"KG OAKside - II"** என்ற பெயர் கொண்ட கட்டிடத்தில் தரைதளத்தில் அனைத்து பொது ஏரியா உட்பட **775 சதுர அடி** சூப்பர் பில்டப் ஏரியா கொண்ட குடியிருப்பு ப்ளாட் எண்.G-B மற்றும் அங்குள்ள **375 சதுர அடி** தனியார் தோட்டம் மற்றும் அங்குள்ள எண்.2 என்று குறியீடப்பட்ட 1 கவர்டு கார் பார்க்கிங் (ஸ்டில்டு தளம்).

வ.எண்.3 Ref.No.HL/6485: கடன்தாரர்கள்: 1. திருமதி. J.சுமதி, க/பெ. திரு. தேவராஜ்.G, 2. திரு. G. தேவராஜ், த/பெ. திரு. கணேசன், இருவரின் முகவரி : எண்.756/4, ப்ளாட் எண்.S-1, 2வது தளம், பிரவுண்ஸ்டோன் சிட்ரைன், 8வது பிரார்த்தனா சாலை, ராம் நகர் தெற்கு, மடிப்பாக்கம், சென்னை - 600 091. அலுவலக முகவரி : நியூட்ரிம்டு பார்மா, எண்.756/4, தரைதளம், 8வது பிரதான சாலை, ராம்நகர் தெற்கு, மடிப்பாக்கம், சென்னை - 600 091. **கோரிக்கை அறிவிப்பு தேதி: 27.02.2024, கடன் கணக்கு எண்.LPR156604849690, NPA தேதி : 08.02.2024, மொத்த நிலுவை தொகை : 26.02.2024 அன்று வரை உள்ள ரூ.39,36,601/- (ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து அறுநூற்று ஒன்று மட்டும்) (இந்த தொகையானது 26.02.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).**

சொத்துக்களின் விவரங்கள் : காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, தற்போது சோழிங்கநல்லூர் தாலுக்கா, ராம் நகர் தெற்கு மனைப்பிரிவு, 8வது பிரதான சாலை, மடிப்பாக்கம் கிராமம் என்ற முகவரியில் L.P.D.M./D.D.T.P.எண்.306/73ன்படி அங்கீகாரம் பெற்ற மனை எண்.743 (கிழக்கு பகுதி)-ல் சர்வே எண்.116/4, பட்டா எண்.13249, பட்டாவின்படி சர்வே எண்.116/1A1B2ன்படி மொத்தமுள்ள **2400 சதுர அடி நிலத்தில் 480 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் **"சிட்ரைன்"** என்ற பெயர் கொண்ட குடியிருப்பில் 2வது தளத்தில் **1045 சதுர அடி** கொண்ட ப்ளாட் எண்.S1. எல்லைகள் : வடக்கில் : மனை எண்.742ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், தெற்கில் : 8வது பிரதான சாலை, 30 அடி சாலை, கிழக்கில் : மனை எண்.745, மேற்கில் : மனை எண்.743ன் மேற்கு பகுதி.

வ.எண்.4 Ref.No.HL/6529: கடன்தாரர்கள்: 1. திருமதி. அமண்டா மெலோடி, க/பெ. சாம் சதீஷ்குமார், 2. திரு. சாம் சதீஷ் குமார், த/பெ பழனி ஜோசப், இருவரின் முகவரி : எண்.32/20, ROB 5வது தெரு, ஹால்ஸ் கார்டன், இராயப்பேட்டை, சென்னை - 600 014. மேலும் : திரு. சாம் சதீஷ் குமார், எண்.3/3, காவேரி நகர், 3வது குறுக்கு தெரு, காரம்பாக்கம், திருவள்ளூர், சென்னை - 600 116. இருவரின் சொத்து முகவரி : ப்ளாட் மனை எண்.F4, பெரிடியன் வில்லா, மாடம்பாக்கம், சென்னை - 600 073. **NPA தேதி : 09.03.2024, கடன் கணக்கு எண் PHR008207106311 (PPR008207066961, ALR008207570858, 4400060121587804-க்கான கடன் கணக்கில் உள்ள நிலுவை தொகை செலுத்த தவறியதால்) கோரிக்கை அறிவிப்பு தேதி: 22.03.2024, மொத்த நிலுவை தொகை : 15.03.2024 அன்று வரை உள்ள ரூ.53,25,593/- (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) (இந்த தொகையானது 15.03.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).**

கடன் கணக்கு எண்.PHR008207106311-க்கு சொந்தமான சொத்துக்களின் விவரங்கள் : தென் சென்னை பதிவு மாவட்டம், சேலையூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, மாடம்பாக்கம் கிராமம், ஜெம் பெரிடியன் நகர் என்ற முகவரியில் பட்டா எண்.9563-ன்படி சர்வே எண்.551, புதிய சர்வே எண்.551/2A1ன்படி மாடம்பாக்கம் டவுன் பஞ்சாயத்து, சென்னை - 600 073 -ன் செயல் அதிகாரி அவர்களால் வழங்கப்பட்ட கடித எண்.519/2019ன்படி 19.11.2019 தேதியிட்ட துணைப்பிரிவு அங்கீகார அனுமதி எண்.190/2019-2020ன்படி மனை எண்.F4ல் உள்ள **904 சதுர அடி** காலி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.F3, தெற்கில் : மனை எண்.F5, கிழக்கில் : சர்வே எண்.551/1 மற்றும் சர்வே எண்.551/2 பகுதி, மேற்கில் : 16 அடி மனைப்பிரிவு சாலை. அளவுகள் : வடக்கில் - 45 அடி, தெற்கில் : 45.4 1/2 அடி, கிழக்கில் : 20 அடி, மேற்கில் : 20 அடி. மொத்த பரப்பளவு : 904 சதுர அடி.

வ.எண்.5 Ref.No.SBB/6339: கடன்தாரர்கள்: 1. M/s. DBK டிரான்ஸ்போர்ட், திரு. K. டில்லிபாபு (உரிமையாளர்), 2. திரு. K. டில்லிபாபு, த/பெ. திரு. குப்பன், 3. திருமதி. ராஜேஸ்வரி குப்பன், க/பெ. திரு. குப்பன் குப்பன், அனைவரின் முகவரி : எண்.3/46, காந்தமங்கலம், செங்காடு, காஞ்சிபுரம், திருவள்ளூர் - 602 002. **NPA தேதி : 16.05.2023, கோரிக்கை அறிவிப்பு தேதி: 28.11.2023, மொத்த நிலுவை தொகை : (கடன் கணக்கு எண்.921030042406854) : 13.11.2023 அன்று வரை உள்ள ரூ.12,23,550.74 (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஐம்பது மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) (இந்த தொகையானது 13.11.2023 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).**

வங்கிக்கு அடமானம் செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விவரங்கள் : செங்கல்பட்டு பதிவு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, கண்டமங்கலம் கிராமம், கதவு எண்.3/46, செங்காடு, கண்டமங்கலம் தெரு என்ற முகவரியில் பழைய சர்வே எண்.106/9 (பகுதி), புதிய சர்வே எண்.333/8ன்படி **1654 சதுர அடி** மற்றும் பழைய சர்வே எண்.106/9 (பகுதி), புதிய சர்வே எண்.333/10ன்படி **1507 சதுர அடி**. மொத்த பரப்பளவு **3161 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம் மற்றும் வசதிகள். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : 1654 சதுர அடிக்கான எல்லைகள் : வடக்கில் : தெரு, தெற்கில் : திரு.நாராயணன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில் : திரு.வெங்கடேசன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, மேற்கில் : திரு.ராஜேந்திரன் அவர்களுக்கு சொந்தமான சொத்து. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 26 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 30 + 17+ 10 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 53 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 53 + 10 அடி. 1507 சதுர அடிக்கான எல்லைகள் : வடக்கில் : திரு.வெங்கடேசன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, தெற்கில் : திரு.நாராயணன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில் : சாலை, மேற்கில் : மீதமுள்ள மனை. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 63 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 26 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 23 அடி.

இடம் : சென்னை
தேதி : 30.03.2024

அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

பிரதமர் மோடியால் மட்டுமே தேசிய பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்

முன்னாள் பிரதமர் தேவெ கௌடா

பெங்களூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாஜக-மஜத கூட்டணி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் பிரதமர் எச்.டி.தேவெ கௌடா, முன்னாள் முதல்வர்கள் எடியூரப்பா, குமாரசாமி உள்ளிட்டோர்.

பெங்களூரு, மார்ச் 29: தேசிய பிரச்னைகள் அனைத்தையும் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா ஆகியோரால் மட்டுமே தீர்க்க முடியும் என்று முன்னாள் பிரதமர் எச்.டி.தேவெ கௌடா தெரிவித்தார்.

பெங்களூரில் வெள்ளிக்கிழமை நடந்த பாஜக-மஜத ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பங்கேற்று, அவர் பேசியது:

கர்நாடகத்தில் நமது அரசியல் எதிரிகள் பலமாக உள்ளனர். கடந்த காலங்களில் நடந்த கசப்பான சம்பவங்கள், கருத்து வேறுபாடுகளை மறக்காத வரை, 28 மக்களவை தொகுதிகளையும் வென்றுவிட முடியும் என்று யாரும் கருதிவிடக் கூடாது. காங்கிரஸ் கட்சியை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். காங்கிரஸ் கட்சியிடம் தாராளமான நிதி ஆதாரம் இருக்கிறது. கர்நாடகத்தில் தற்போது ஆட்சி நடத்தி வரும் அக்கட்சியின் முக்கியமான நோக்கமே பணம் சம்பாதிப்பது தான். அவர்களின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

பெங்களூரு மட்டுமல்லாது, ஒவ்வொரு துறையும் ஒரு தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. காங்கிரஸ் கட்சியின் நிதிபலத்திற்கு ஈடுகட்ட முடியாது. அவர்களை எதிர்கொள்வதும் சாதாரணமானது அல்ல. எனது மகனும், முன்னாள் முதல்வருமான எச்.டி.குமாரசாமி மஜத வேட்பாளராக போட்டியிடும் மண்டியா தொகுதியில் காங்கிரஸ் எவ்வளவு பணத்தைக் கொட்டியுள்ளது என்பது தெரியவில்லை.

இந்திய அளவில் காங்கிரஸ் 4 மாநிலங்களில் மட்டுமே ஆட்சியில் இருக்கிறது. அதனால் தேர்தல் செலவுகளுக்கு கர்நாடகத்தையே காங்கிரஸ் நம்பியிருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கர்நாடகத்தைச் சேர்ந்தவர். இதைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, தேர்தலை வெல்வது அவ்வளவு எளிதானதல்ல. தேர்தல் பணியில் முன்னாள் முதல்வர் எடியூரப்பாவின் பங்களிப்பு முக்கியமானது. கர்நாடக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 94 எம்எல்ஏக்கள், வாரியங்கள், கழகங்களின் தலைவர்களாக அமைச்சர் அந்தஸ்தில் பதவிவகித்து வருகிறார்கள்.

கர்நாடகத்தில் மஜத எங்கிருக்கிறது என்று முதல்வர் சித்தராமையா கேட்கிறார். கர்நாடகத்தில் மஜத இன்னும் உயிரோடு இருக்கிறது என்பதை 91 வயதான என்னால் நிரூபிக்க முடியும். எனக்கு எவ்வித அச்சமும் இல்லை.

10 ஆண்டுகாலம் பிரதமராகப் பணியாற்றியுள்ள நிலையில், நமது நாட்டைப் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்கும் தலைவர் மோடியைத் தவிர வேறு எவரும் இல்லை. நமது நாட்டின் தேசிய பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்துவைக்கும் ஆற்றல் படைத்த தலைவர்களாக பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகிய இருவர் மட்டுமே இருக்கிறார்கள் என்றார்.

முன்னாள் முதல்வர் எடியூரப்பா பேசுகையில், 'கர்நாடகத்தில் பாஜக-மஜத கூட்டணி 28 தொகுதிகளையும் கைப்பற்றும். கர்நாடகத்தில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ், வளர்ச்சிப் பணிகளை நிறுத்தியுள்ளது. காங்கிரஸ் ஆட்சி பற்றி கூறுவதற்கு எதுவும் இல்லை. காங்கிரஸ் ஆட்சி மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். மாநில அரசின் கருவூலம் காலியாக உள்ளதால், வளர்ச்சிப் பணிகள் முடங்கியுள்ளன' என்றார்.

இந்தக் கூட்டத்தில் மஜத முன்னாள் முதல்வர் எச்.டி.குமாரசாமி, பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா, எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மக்களவைத் தேர்தலில் கர்நாடகத்தில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் 25 இடங்களில் பாஜகவும், 3 தொகுதிகளில் மஜதவும் போட்டியிடுகின்றன.

பகுஜன் சமாஜ் எம்எல்ஏ கொலை: 7 பேர் குற்றவாளிகளாக அறிவிப்பு

லக்னௌ நீதிமன்றம் தீர்ப்பு

லக்னௌ, மார்ச் 29: உத்தர பிரதேசத்தில் கடந்த 2005-ஆம் ஆண்டில் பகுஜன் சமாஜ் எம்எல்ஏ ராஜூ பால் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் 7 பேரை குற்றவாளிகளாக அறிவித்து, லக்னௌ சிறப்பு நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

தாதாவாக இருந்து பின்னர் அரசியலுக்கு வந்த முன்னாள் எம்.பி. அதிக் அகமது, அவரது சகோதரர் அஷ்ரஃப் ஆகியோரும் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த நிலையில், இருவரும் கடந்த ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையடுத்து, அவர்களுக்கு எதிரான விசாரணை கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரயாக்ராஜ் மேற்கு பேரவைத் தொகுதியில் பகுஜன் சமாஜ் எம்எல்ஏவாக இருந்த ராஜூ பால், அரசியல் பகை காரணமாக கடந்த 2005, ஜனவரி 25-ஆம் தேதி பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்தொகுதியில் கடந்த 2002-இல் நடைபெற்ற தேர்தலில் ராஜூ பாலை தோற்கடித்து, அதிக் அகமது வெற்றி பெற்றார். பின்னர், அதிக் அகமது எம்.பி.யாக தேர்வானதால், தனது எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்தார்.

இதையடுத்து, பிரயாக்ராஜ் மேற்கு தொகுதிக்கு கடந்த 2004-இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ராஜூ பால் மற்றும் அதிக் அகமதுவின் சகோதரர் அஷ்ரஃப் ஆகியோர் போட்டியிட்டனர். இத்தேர்தலில், அஷ்ரஃபை தோற்கடித்து, ராஜூ பால் வெற்றி பெற்றார். இதையடுத்து, அஷ்ரஃப் சதித் திட்டம் தீட்டி, ராஜூ பால் கொலையை அரங்கேற்றியது தெரியவந்தது.

கடந்த 2016-ஆம் ஆண்டில் சிபிஐ-க்கு மாற்றப்பட்ட இந்த வழக்கில் அஷ்ரஃப், அதிக் அகமது உள்ளிட்டோர் மீது குற்றம்சுமத்தப்பட்டு, லக்னௌவில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், கொலை, குற்றச் சதி உள்பட பல்வேறு பிரிவுகளின்கீழ் ரஞ்சித் பால், அபித், ஃபர்ஹான் அகமது, இஸ்ரார் அகமது, ஜாவத், குல்ஹசன், அப்துல் ஆகிய 7 பேரை சிறப்பு நீதிமன்றம் குற்றவாளிகளாக அறிவித்தது.

கடந்த ஆண்டு, ஏப்ரல் மாதம் போலீஸ் காவலில் இருந்த அதிக் அகமது, அஷ்ரஃப் ஆகியோர், பிரயாக்ராஜில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அழைத்து வரப்பட்டனர். அப்போது, ஊடகவியலாளர்கள் போல் வந்த 2 பேர், அதிக் மற்றும் அவரது சகோதரரை சுட்டுக் கொன்றனர்.

ஊடக கேமராக்கள் முன்னிலையில் நடந்த இக்கொலை சம்பவம் அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இருவரின் இறப்பைத் தொடர்ந்து, அவர்களுக்கு எதிரான விசாரணை கைவிடப்பட்டது.

ம.பி.: போஜ்சாலா வளாகத்தில் 8-ஆவது நாளாக தொல்லியல் ஆய்வு

தார், மார்ச் 29: மத்திய பிரதேசத்தில் சர்ச்சைக்குரிய போஜ்சாலா வளாகத்தில் இந்திய தொல்லியல் துறை சார்பில் வெள்ளிக்கிழமை 8-ஆவது நாளாக ஆய்வு நடைபெற்றது.

மத்திய பிரதேச மாநிலம் தார் பகுதியில் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட போஜ்சாலா வளாகம் உள்ளது. அதை இந்திய தொல்லியல் துறை பாதுகாத்து வருகிறது.

இந்த வளாகம் சரஸ்வதி தேவியின் கோயிலாக இருந்ததாகவும், பின்னர் அங்கு மசூதி கட்டப்பட்டதாகவும் ஹிந்துக்கள் தரப்பில் கூறப்படுகிறது. இதை மறுத்து வரும் முஸ்லிம்கள், அந்த வளாகத்தை கமால் மௌலா மசூதி என்றழைக்கின்றனர்.

இதுதொடர்பாக சர்ச்சை நீடித்து வரும் நிலையில், அந்த வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை ஹிந்துக்களும், வெள்ளிக்கிழமை முஸ்லிம்களும் வழிபட அனுமதித்து கடந்த 2003-ஆம் ஆண்டு இந்திய தொல்லியல் துறை உத்தரவு வெளியிட்டது.

இந்நிலையில், போஜ்சாலா வளாகத்தை ஹிந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும், அங்கு முஸ்லிம்கள் வழிபடுவதை நிறுத்த வேண்டும் என்று கோரி, நீதிக்கான ஹிந்து முன்னணி என்ற அமைப்பு மத்திய பிரதேச உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், 'போஜ்சாலா வளாகத்தில் இந்திய தொல்லியல் துறை அறிவியல்பூர்வ ஆய்வு மேற்கொள்ள வேண்டும். 6 வாரங்களில் ஆய்வு நிறைவு செய்யப்பட வேண்டும்' என்று கடந்த மார்ச் 11-ஆம் தேதி உத்தரவிட்டது.

இதையடுத்து போஜ்சாலா வளாகத்தில் இந்திய தொல்லியல் துறை ஆய்வைத் தொடங்கியது.

பலத்த பாதுகாப்புடன் இந்த ஆய்வு 8-ஆவது நாளாக வெள்ளிக்கிழமை தொடர்ந்தது.

இதனிடையே, சுமார் 2,400 முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டதாக காவல் துறை கண்காணிப்பாளர் மனோஜ் சிங் தெரிவித்தார்.

திகார் சிறையில் கவிதாவுக்கு வீட்டு உணவு அனுமதியில்லை

அதிகாரிகளிடம் விளக்கம் கோரிய நீதிமன்றம்

புது தில்லி, மார்ச் 29: திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாரத ராஷ்டிர சமிதி (பிஆர்எஸ்) தலைவர் சந்திரசேகர் ராவின் மகள் கே.கவிதாவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டும் அவருக்கு வீட்டு உணவு, இதர பொருள்கள் வழங்க அனுமதிக்கப்படாதது குறித்து அதிகாரிகளிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது.

தில்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறையால் அண்மையில் கைது செய்யப்பட்ட பிஆர்எஸ் எம்எல்சி கே.கவிதா, நீதிமன்றக் காவலில் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

விதிமுறைகளுக்கு உள்பட்டு, அவருக்கு வீட்டு உணவு, பாய், செருப்பு, படுக்கை விரிப்பு, பேனா, காகிதம், மருந்துகள், புத்தகங்கள் உள்ளிட்டவற்றை வழங்க நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தது.

ஆனால், வீட்டு உணவு உள்ளிட்ட பொருள்களை வழங்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்று கூறி, தில்லி சிறப்பு நீதிமன்றத்தில் கவிதா தரப்பில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், நீதிமன்ற உத்தரவை அதிகாரிகள் பின்பற்றவில்லை; எனது கண் கண்ணாடி மற்றும் ஜெபமாலையை வைத்திருக்கவும் அனுமதிக்கப்படவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த மனு மீது சிறை அதிகாரிகள் விளக்கமளிக்க உத்தரவிட்ட நீதிபதி காவேரி பவேஜா, அடுத்தகட்ட விசாரணையை சனிக்கிழமை (மார்ச் 30) ஒத்திவைத்தார்.

உ.பி.: சிறையில் பிரபல தாதா முக்தார் அன்சாரி உயிரிழப்பு

மாநிலத்தில் பதற்றம்; பாதுகாப்பு அதிகரிப்பு

பலத்த போலீஸ் பாதுகாப்புடன் உ.பி. மாநிலம் காஜிப்பூருக்கு முக்தார் அன்சாரியின் உடலை எடுத்துச் சென்ற ஆம்புலன்ஸ்.

லக்னௌ, மார்ச் 29: உத்தர பிரதேசத்தின் பாந்தா சிறையில் அடைக்கப்பட்டிருந்த அந்த மாநிலத்தின் 5 முறை முன்னாள் எம்எல்ஏவும் பிரபல தாதாவுமான முக்தார் அன்சாரி உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மாரடைப்பு ஏற்பட்டு வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார்.

முக்தார் அன்சாரியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர். இதையடுத்து, பாந்தா, மௌ, காஜிப்பூர், வாரணாசி உள்பட பல்வேறு பகுதிகளில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல தாதா முக்தார் அன்சாரி, மௌ சதார் தொகுதியிலிருந்து சமாஜவாதி கட்சி சார்பில் 5 முறை எம்எல்ஏ-ஆக தேர்ந்தெடுக்கப்பட்டவர். கடந்த 2005-ஆம் ஆண்டுமுதல் உத்தர பிரதேசம், பஞ்சாப் சிறைகளில் இருந்து வரும் அன்சாரிக்கு எதிராக 60 குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

கடந்த 2022-ஆம் ஆண்டுமுதல் பாந்தா சிறையில் முக்தார் அன்சாரி அடைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், சிறையில் முக்தார் அன்சாரிக்கு வியாழக்கிழமை வயிற்று வலி ஏற்பட்டதால், பண்டா நகரின் ராணி துர்காவதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வியாழக்கிழமை இரவு 8.25 மணியளவில் அவர் மயக்கமடைந்த நிலையில் கொண்டுவரப்பட்டார்.

14 மணி நேர சிகிச்சைக்குப் பிறகு, மாரடைப்பு காரணமாக முக்தார் அன்சாரி உயிரிழந்துவிட்டதாக மருத்துவமனைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. முக்தார் அன்சாரியின் உடல் கூறாய்வு வெள்ளிக்கிழமை பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது. பின்னர், அன்சாரியின் உடல் போலீஸார் வாகன பாதுகாப்புடன் அவரின் சொந்த ஊரான காஜிப்பூருக்கு கொண்டு செல்லப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள் விமர்சனம்: முக்தார் அன்சாரி மரணத்தை முன்வைத்து பாஜக அரசை பல்வேறு கட்சிகளும் விமர்சித்துள்ளன.

சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ் கூறுகையில், 'எல்லா சூழ்நிலைகளிலும் மக்களின் உயிரைப் பாதுகாப்பது அரசின் கடமை. மக்களின் உயிரைப் பாதுகாக்க முடியாத அரசுக்கு ஆட்சியில் இருக்க உரிமை இல்லை' என்றார்.

'மாநில காவல் துறை கட்டுபாட்டற்றவர்களாக மாறி வருவது ஆபத்தானது. நாட்டிலேயே போலீஸ் காவலில் நிகழும் உயிரிழப்புகளில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் இருக்கிறது' என காங்கிரஸ் குற்றம்சாட்டியது.

பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி, ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி யாதவ், காங்கிரஸைச் சேர்ந்த பிகார் முன்னாள் எம்.பி. பப்பு யாதவ் ஆகியோரும் பாஜக அரசை விமர்சித்துள்ளனர்.

'விஷம் கொடுத்து கொலையா?'

தனது தந்தையின் திடீர் இறப்பு குறித்து முக்தார் அன்சாரியின் மகன் உமர் அன்சாரி கூறுகையில், 'சிறையில் எனது தந்தைக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரின் இறப்புச் செய்தியை ஊடகம் வாயிலாகவே நாங்கள் அறிந்தோம். அவரது இறப்பு குறித்து உயர்நிலை விசாரணை நடத்தப்பட வேண்டும்' என்றார்.

முக்தார் அன்சாரியின் சகோதரரும் காஜிப்பூர் எம்.பி.யுமான அஃப்சல் அன்சாரி கூறுகையில், 'சிறையில் முக்தார் அன்சாரிக்கு கடந்த 40 நாள்களாக கொஞ்சம் கொஞ்சமாக விஷம் கொடுக்கப்பட்டுள்ளது' என்று குற்றஞ்சாட்டினார்.

இதனிடையே, முக்தார் அன்சாரியின் இறப்பு குறித்து பாந்தா நகரிலுள்ள தலைமை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நீதித் துறை விசாரணைக்கு வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.